# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443, 2885439
பொது அலுவலகம்
General Office
ෆැක්ස්/தொலைநகல்/Fax: 011-2868426
*Web: www.elections.gov.lk*

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය(10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய(10107)
*E-mail: info@elections.gov.lk*


| | | |
|---|---|---|
| මගේ අංකය: | ඔබේ අංකය: | දිනය: |
| எனது இல. : EC/LI/15/III/Elpitiya | உமது இல.: | திகதி: 2024.10.04 |

**சுற்றறிக்கை இல: EPS/2024/10**

காலி மாவட்ட செயலாளருக்கும், காலி மாவட்ட பிரதி தேர்தல்கள் ஆணையாளருக்கும்,

<u>2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் நோக்கங்களை அமுல்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்</u>

எதிர்வரும் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்குரிய முடிவுகள் வெளிபிடப்பட்ட தினத்திலிருந்து 60 நாட்கள் செல்லும் வரை காலி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின்/மாவட்ட செயலகத்தின் வளவில் 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு விசேட அலகொன்று மாவட்ட தேர்தல் பிணக்குத தீர்வு நிலையத்தோடு இணைக்கப்பட்ட துணை அலகொன்றாக பராமரிக்கப்பட வேண்டும். மாவட்ட தேர்தல் பிணக்குத் தீர்வு நிலையத்தோடு இணைக்கப்பட்ட விசேட துணை அலகொன்றாக நிறுவப்படும் இந்த அலகின் செயற்பொறுப்பு, தேர்தலுக்குத் தேர்தல் மாற்றமடையலாம் என்பதோடு, பின்வரும் அறிவுறுத்தல்கள் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கு ஏற்புடைத்தாக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

**01. அதிகாரமளிக்கப்பட்ட தொகை, விபரத்திரட்டுக்களைக் கையேற்றல், காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் என்பவற்றை நிர்ணயித்தல்**

1.1 எல்பிட்டிய உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்கான பெயர் குறித்த நியமனப்பத்திரங்களைக் கையேற்ற நாளிலிருந்து ஐந்து நாட்களுக்குள் தேர்தல் ஆணைக்குழுவினால் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை உசாவியதன் பின்னர் அதிகாரமளிக்கப்பட்ட தொகை நிர்ணயிக்கப்பட்டு 2401/43 ஆம் இலக்க வர்த்தமானி 2024.09.14 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

1.2 அத்தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு முடிவடைந்த நாளிலிருந்து 21 நாட்களுக்குள் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்தி ஒப்படைக்கும் வருமான, செலவின விபரத்திரட்டுக்களை காலி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில்/ மாவட்ட செயலக வளவில் நிறுவப்படுகின்ற விசேட துணை அலகில் ஒப்படைக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.3 அதேபோல், உரிய காலப்பகுதியான 21 நாட்களுக்குள் கிடைக்கபெற்ற அத்தகைய வருமான, செலவின விபரத்திரட்டுக்கள், குறித்த 21 ஆவது நாளை அடுத்துவரும் 10 நாட்களுக்குள் இலங்கைப் பிரசைகளுக்கு பரீட்சிக்கக்கூடிய இடங்கள், நாட்கள், நேரங்கள் என்பவற்றைக் குறிப்பிட்டு மும்மொழிகளிலும் 03 செய்தித்தாள் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படும். அதற்கு தாங்கள் தெரிவுசெய்த இடம் பற்றிய விபரங்களை 2024.10.25 ஆம் திகதிக்கு முன்னர் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

1.4 அதன்படி, மேலே குறிப்பிடப்பட்ட 60 நாள் காலம் என்பது எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை நடாத்தி முடித்த பின்னர் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி, சுயேச்சைக் குழு மற்றும் வேட்பாளர் 21 நாட்களான மேற்கூறிய தேர்தல் செலவினம் பற்றிய விபரத்திரட்டை

ஒப்படைக்கின்ற காலமும், 10 நாட்களான இடங்களை அறிவிக்கும் விளம்பரம் பிரசுரிக்கப்பட வேண்டிய காலமும், 30 நாட்களான குறித்த செலவின விபரததிரட்டுக்களைப் பரீட்சிப்பதற்கு வழங்கப்படுகின்ற காலமுமாகும்.

**02. மாவட்ட தேர்தல் பிணக்குத் தீர்வு நிலையத்தோடு இணைக்கப்பட்ட தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் விசேட துணை அலகு**

2.1 அதன்படி, எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலின்போது போட்டியிட்ட கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் வருமான, செலவின விபரத்திரட்டுக்களின் பிரதிகளைப் பரீட்சிப்பதற்கும், அவை சம்பந்தமாக பல்வேறு தரப்புகளினால் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளைக் கையேற்கும் வேலைத்திட்டமொன்று இவ்வலகினால் நிறுவப்பட வேண்டும்.

**03. எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் காலப்பகுதியில் மாவட்ட துணை அலகைப் பராமரிக்க வேண்டிய விதம்**

3.1 இறுதி முடிவுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் மாவட்ட தேர்தல் பிணக்குத் தீர்வு நிலையம் திறந்திருக்கும் நேரங்களில் இந்த அலகு திறந்திருக்கும் என்பதுடன், தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு 60 நாட்கள் செல்லும் வரை இவ்வலகு இயங்கும்.

3.2 முடிவுகள் வெளியிடப்பட்டு ஒரு வார காலத்திற்குப் பின்னர் தேர்தல் பிணக்குத் தீர்வு நிலையத்தின் நடவடிக்கைகள் முடிவடைந்தபோதும், இவ்வலகின் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு வேலைத்திட்டத்தை பிரதி தேர்தல்கள் ஆணையாளர் வகுக்க வேண்டும். அதற்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவர், முகாமைத்துவ சேவை அலுவலரொருவர், அலுவலகப் பணி உதவியாளர் ஒருவர் ஆகியோரை இணைத்துக்கொண்டால் போதுமானது.

3.3 வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி இவ்வலகினால் கையேற்கப்படும் வருமான, செலவின விபரத்திரட்டுகளின் பிரதிகளைப் பரீட்சிப்பதற்கும், அது சம்பந்தமான முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கும் பிரசைகளுக்கு தேவைப்படும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதற்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி முறைசார்ந்த நடவடிக்கைமுறையொன்றைப் பின்பற்றுதல் வேண்டும்.

3.4 தேர்தல் பிணக்குத் தீர்வு நிலையத்திற்கு நியமிக்கப்படும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவரும், முகாமைத்துவ சேவை அலுவலரும் வகுப்பு ஒன்று அல்லது வகுப்பு இரண்டு அலுவலரொருவரும் இவ்வலகுக்கு இணைக்கப்படலாம். இந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும், முகாமைத்துவ சேவை அலுவலரும் மற்றும் பல்வேறு தரப்புகளும் வந்து மேற்கொள்ளும் பரீட்சிப்புகளுக்குரிய வசதியளிப்பதுடன் முறைப்பாடுகளை ஏற்க வேண்டுமாதலால், அலுவலக நேரங்களில் நிலையத்தில் இருப்பதற்குரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். அதேபோல், அதற்கு சிறந்த அர்ப்பணிப்பும் உயர்ந்த செயல்திறனுமுள்ள இரண்டு அலுவலர்களைத் தெரிவுசெய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வெளிக்கப் பணிகள் இன்மை காரணமாக அலகுக்கு எரிபொருள் அல்லது வாகனங்களை வழங்கத் தேவையில்லை.

**04. செலவின விபரத்திரட்டுக்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களை பகிரங்கப்படுத்தல்**

4 1. தேர்தல் ஆணைக்குழுவினால் சட்டத்தின் 7(2) ஆம் பிரிவுக்கமைய விபரத்திரட்டுக்கள் ஒப்படைகப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் வேட்பாளர்களினாலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்களினாலும் ஒப்படைக்கப்படும் செலவின விபரத்திரட்டுக்களை ஆளெவருக்கேனும் பரீட்சிப்பதற்கு வாய்ப்புள்ள இடங்கள், நாட்கள், நேரம் என்பவற்றைக் குறிப்பிட்டு தேசிய செய்தித்தாள்களில் மும்மொழிகளிலும் விளம்பரமொன்று பிரசுரிக்கப்படும்.

4.2 இந்த விளம்பரத்தின் மூலம் பரீட்சிக்கப்பட்ட ஆவணங்கள் சம்பந்தமாக ஏதேனும் முறைப்பாடுகள் இருக்குமாயின், அத்தகைய முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கக்கூடிய விதமும் அதில் குறிப்பிடப்படும்.

4.3 இந்த விபரத்திரட்டுகளை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப் பொருத்தமான ஓரிடத்தை தாங்கள் முற்கூட்டியே அடையாளம் காண வேண்டும். விபரத்திரட்டுக்கள் காட்சிக்கு வைக்கப்படும் இடம் பற்றி இச்சுற்றறிக்கையின் 1.3 பிரிவு இன்படி அறிவிக்க நடவடிக்கை எடுக்கவும்.

**05. எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலொன்றின்போது வருமான, செலவின விபரத்திரட்டைக் கையேற்றலும் பாதுகாத்தலும்**

5.1 ஒவ்வொரு வருமான, செலவின விபரத்திரட்டும் காலி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் அத்தகைய விபரத்திரட்டுக்களைப் பரீட்சித்து திகதி முத்திரையிட்டு எல்லாப் பிரதிகளிலும் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலரொருவர் குறும் ஒப்பமிட்டு அட்டவணை 07 இன்படி நாளாந்த தகவல் குறிப்பேட்டில் உட்படுத்த வேண்டும் என்பதுடன், அத்தகைய விபரத்திரட்டுகளை வழங்கிய மற்றும் தகவல்களை உட்படுத்திய ஆளின் பெயரும் கையொப்பமும் அதில் சேர்க்கப்படும்.

5.2 கிடைக்கப்பெறும் அனைத்து செலவின விபரத்திரட்டுக்களையும் ஸ்கான்(Scan) செய்து தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தரவேற்றம் செய்ய தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டிருப்பதனால், செலவின விபரத்திரட்டுகளுக்கு தனித்தனியாக அடையாளம் காணக்கூடிய கோப்பு முறையொன்று தயாரிக்கப்படும்.

5.3 அனைத்து செலவின விபரத்திரட்டுக்களையும் பிரதியெடுத்து அதன் மூலப் பிரதியை கோப்பிட்டு பாதுகாப்பாக வைத்திருப்பதுடன், பிரதியெடுத்த மூலப்பிரதியின் உண்மைப் பிரதிகளின் விபரத்திரட்டு ஆளெவருக்கும் பரீட்சிக்கக்கூடியவாறு அலுவலரொருவரின் மேற்பார்வையின் கீழ் முறையாக கோப்பிட்டு வைக்கப்படும்.

5.4 முறைப்பாடுகள் மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்காக வருமான, செலவின விபரத்திரட்டுக்களை பொலிசுக்கு சமர்ப்பிக்கும்போது அவ்விபரத்திரட்டுக்களின் மூலப் பிரதியை ஒப்படைக்க வேண்டுமாதலால், அது சம்பந்தமாக அட்டவணை 08 படிவத்திற்கு உரிய தகவல்கள் வைத்திருக்கப்படும்.

5.5 கையேற்ற அனைத்து வருமான, செலவின விபரத்திரட்டுக்களையும் வழங்கிய ஆள்/ கட்சி/ சுயேச்சைக் குழு முதலியன குறிப்பிடப்பட்ட ஆவணமொன்று மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்.

5.6 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படாத விபரத்திரட்டுக்களை பாதுகாப்பாக வைத்திருப்பதுடன், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரகாரம் 12 வருடங்கள் இந்த ஆவணங்கள் வைத்திருக்கப்பட வேண்டும். ஸ்கான் செய்யப்படும் ஆவணங்கள் பாதுகாப்பாக வைத்திருக்கப்படுவதனாலும், தற்போதுள்ள இடவசதிகளைக் கவனித்து தேவை கருதி பொருத்தமான காலத்தில் அழிப்பதற்கு தகவலுக்கான உரிமைகள் பற்றிய ஆணைக்குழுவிலிருந்து அவசியமான அனுமதி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5.7 செலவின விபரத்திரட்டு, வருமான விபரத்திரட்டு, உரிய சாட்சிகளும் சத்தியக் கடதாசிகளும் முதலியவற்றைப் பரீட்சிக்கும்போது சட்டத்தில் குறிப்பிடப்படும் தகவல்கள் குறிப்பாக உள்ளனவா என்பதைப் பரீட்சித்து சத்தியக் கடதாசி உரிய முறையில் கையொப்பமிடப்பட்டுள்ளதா என்பது பரீட்சிக்கப்படும். அந்நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனில், சம்பந்தப்பட்டவர்களுக்கு அது பற்றி அறிவித்து விபரத்திரட்டை வழங்கிய இடத்திலேயே குறித்த வழுக்கள் சீர்செய்து கொள்ளப்பட வேண்டும். கையேற்கப்பட்ட விபரத்திரட்டுக்களில் திருத்தங்களை மேற்கொள்ள அல்லது வேறெந்தக் காரணத்தினாலும் அலுவலகத்தை விட்டு வெளியே அனுப்பாமல் இருப்பதற்கு பொறுப்பாக இருப்பது கட்டாயமானதாகும்.

5.8 அட்டவணை 07, அட்டவணை 08 க்குரிய தகவல்களை நாள்தோறும் கோப்பிட்டு பேண வேண்டும்.

## 06. செலவின விபரத்திரட்டுக்களைப் பரீட்சிப்பதற்கு வாய்ப்பளித்தல்

6.1 தேர்தல் செலவின விபரத்திரட்டுக்களைப் பரீட்சிப்பதற்கு தேவைப்படும் ஆளெவருக்கும் குறிப்பிட்ட ஆவணங்கள் பிரசித்தப்படுத்தப்பட்ட இடங்களுக்குச் சென்று அட்டவணை 04 படிவத்திற்கு அமைவாக உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு கோரிக்கையொன்றை வழங்கி அவரது ஒப்புதலின் பேரில் அலுவலரொருவரின் மேற்பார்வையின் கீழ் குறித்த ஆவணங்களைப் பரீட்சிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். பிற்காலத்தில் செயல்வலுப்பெறும் சட்ட ஏற்பாடுகளின் கீழ் சட்டத்தை வினைப்படுத்தும் யாதேனுமொரு நிறுவனத்தினால் செய்யப்படும் சட்டப் பணிப்பொன்றின் அல்லது கோரிக்கையொன்றின் பேரில் குறித்த நிறுவனத்திற்கு யாதேனும் தேர்தல் செலவின விபரத்திரட்டொன்றின் அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

6.2 ஆவணங்கள் பரீட்சிக்கப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த ஆவணங்களை உருச்சிதைத்தலும், சேதம் விளைவித்தலும், வளவுக்கு வெளியே எடுத்துச் செல்வதும் பொதுச் சொத்துக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உரியதெனக் கருதப்படும் ஒரு குற்றமாகக் கருதப்பட வேண்டும். பரீட்சிக்கும் ஆட்களுக்கு அது குறித்த அறிவுறுத்தல்கள் தங்களினால் வழங்கப்பட வேண்டும். அத்தகைய ஆவணங்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருப்பின், அது குறித்து பரீட்சித்துவிட்டு சம்பந்தப்பட்டவர் எச்சரிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, மீண்டும் சரியான பிரதிகள் மக்களது பார்வைக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

6.3 இவ்வாறு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள ஆவணங்களை எவ்விதத்திலும் நிழற்படம் பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதென்றும் ஆவணங்களைப் பரீட்சிக்கும் ஆட்களுக்கு அறிவிப்பதும் பரீட்சிக்கும் போது அலுவலரொருவர் அங்கிருப்பதற்கு அறிவுறுத்தல் வழங்குவதும் உகந்தது.

6.4 செலவின விபரத்திரட்டுக்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளும் தேவையுள்ள தரப்புகளுக்கு/ஆட்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் ஒரு கட்டணத்தைச் செலுத்தி அவற்றின் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம். அட்டவணை 05 படிவத்தை இதற்குப் பயன்படுத்த வேண்டும்.

6.5 முடிவுகளை வெளியிட்டதன் பின்னர் 21 நாள் காலக்கெடுவுக்குள் வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஒவ்வோர் அரசியல் கட்சி, சுயேச்சைக் குழு, வேட்பாளரினால் வழங்கப்படும் செலவின விபரத்திரட்டுக்களைக் கையேற்பதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும், பிரதியெடுப்பதற்கும், இணையத்தளத்திற்கு பதிவேற்றம் செய்வதற்கும், அதனைப் பரீட்சித்துப் பார்க்கக்கூடிய இடங்களை பகிரங்கப்படுத்தியதன் பின்னர் தேவைப்படும் தரப்புகளுக்கு அவற்றைப் பரீட்சிப்பதையும் முறைப்பாடு செய்வதையும் இயலச்செய்யும் விதத்தில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

## 07. முறைப்பாடுகளைக் கையேற்றலும் சட்ட நடவடிக்கைக்கு சமர்ப்பித்தலும்

### 7.1 தேர்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது தெரிவத்தாட்சி அலுவலருக்கு முறைப்பாடு செய்தல்

7.1.1 செலவின விபரத்திரட்டுக்களைப் பரீட்சித்த ஆளொருவர் குறித்த விபரத்திரட்டுக்கு எதிராக முறைப்பாடொன்றைச் செய்வதாயின், குறித்த விபரத்திரட்டுக்களை பரீட்சித்த இடத்தில் அவற்றுக்குப் பொறுப்பாக இருக்கின்ற அலுவலருக்கு தனது முறைப்பாட்டை முன்வைக்கலாம். அத்தகைய முறைப்பாட்டையும் அதற்குரிய சான்றாவணங்களையும் தகவல்களையும் அவ்வேளை சமர்ப்பிக்கலாம்.

7.1.2 தெரிவத்தாட்சி அலுவலர்/தேர்தல் ஆணைக்குழு சார்பாக முறைப்பாடுகளை ஏற்கும் அலுவலர் முறைப்பாடுகளாக ஒப்படைக்கப்படும் ஆவணங்கள் தவிர குறித்த முறைப்பாட்டை வழங்கும் ஆளின் தகவல்களையும் ஆளடையாளத்தையும் அட்டவணை 06 இற்கமைய தெளிவாக குறித்துக்கொள்ள வேண்டும். முறைப்பாட்டுடன் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களின் விபரங்களும் அதில் சேர்க்கப்பட வேண்டும்.

7.1.4 தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கு ஏற்புடைய முறைப்பாடுகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அல்லது தேர்தல் ஆணைக்குழு சார்பாக குறித்த

தெரிவத்தாட்சி அலுவலருக்கு அஞ்சல்மூலம் அனுப்பிவைக்கலாம். அதற்காக குறித்த முறைப்பாட்டாளர் அத்தகவல்களுடன் அவரது ஆளடையாளத்தையும் உறுதிப்படுத்த வேண்டும்.

7.1.5 அஞ்சல்மூலம் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும் பட்சத்தில், முறைப்பாடு கிடைத்துள்ளமை பற்றி அவ்வாட்களுக்கு அறிவிக்க வேண்டும். தொலைபேசி அழைப்பொன்றின் மூலமும் அட்டவணை 06 படிவத்தைப் பூரணப்படுத்த முடியும்.

7.1.6 நிகழ்நிலை முறை ஊடாகவும் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கலாம். அவ்வாறு தலைமை அலுவலகத்துக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் வேளைக்கேற்றவாறு மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

7.2 ஆளெவருக்கும், எந்தவொரு பொலிஸ் நிலையத்திலும், தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கு அமைவான முறைப்பாடொன்றை முன்வைக்கலாம்.

7.3 தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும் தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கு ஏற்புடைய அனைத்து முறைப்பாடுகளையும் ஆணைக்குழு பொலிஸுக்கு அனுப்பும்போது முறைப்பாடுகளின் பிரதிகள் தேவைக்கேற்ப உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கும், கணக்காய்வுத் திணைக்களத்துக்கும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

7.4 மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்துக்கும் பொலிஸுக்கும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் குறித்த பொழிப்பான விபரத்திரட்டுக்களை நாளாந்தம் தயாரித்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

7.5 வாக்கெடுப்பின் இறுதியில் தேர்தல் ஆணைக்குழுவினால் உரிய முறையில் செலவின விபரத்திரட்டுக்களை வழங்காத கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்களின் பட்டியல், முடிவுகள் வெளியிடப்பட்டு முடிவடைந்து 22 நாட்களுக்குப் பின்னர் மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக உரிய பொலிஸ் நிலையங்களுக்கு தலைமை அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப்படும்.

7.6 விபரத்திரட்டுக்கள் வழங்கப்படாமையும், விபரத்திரட்டுகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளும் சம்பந்தமான சட்ட நடவடிக்கைகளை துரிதமாக அமுல்படுத்தும் பணியை இலங்கைப் பொலிஸார் மேற்கொள்வார்கள் என்பதோடு, தேர்தல் ஆணைக்குழு அது சம்பந்தமான தொடராய்வு நடவடிக்கைகளை எடுக்கும்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்


සභාපති
தவிசாளர்
දුරකථන/தொலைபேசி: 011-2868444
ෆැක්ස්/தொலைநகல்: 011-2868445
*e-mail: chairman@elections.gov.lk*

මැතිවරණ කොමසාරිස් ජනරාල්
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
දුරකථන/தொலைபேசி: 011-2885207
ෆැක්ස්/தொலைநகல்: 011-2885208
*e-mail: cge@elections.gov.lk*

අතිරේක මැතිවරණ කොමසාරිස් *(නීති හා විමර්ශන)*
*மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம், விசாரணை)*
දුරකථන/தொலைபேசி: 011-2867471
ෆැක්ස්/தொலைநகல்: 011-2868448
*E-mail: addcomlegal@elections.gov.lk*

## வேட்பாளரினால் வழங்கப்பட வேண்டிய செலவு தொடர்பான விபரத்திரட்டு

01. வேட்பாளரின் பெயர்:...........................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

02. முகவரி: ........... ...........................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

03. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி / சுயேச்சைக் குழுவின் பெயர்:

...........................................................................................................................

05. உயர்ந்தபட்ச செலவு எல்லை (ரூபா) : ..................................................

..........................................................

வேட்பாளரின் கையொப்பம்

திகதி : ..........................................................

## கட்சி, சுயேச்சைக் குழுவினால் வழங்கப்பட வேண்டிய செலவு தொடர்பான விபரத்திரட்டு

கட்சி செயலாளரினால் அல்லது சுயேச்சைக்குழுவின் தலைவரால் இந்தப் படிவம் பூரணப்படுத்தப்படல் வேண்டும்

01. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பெயர் / சுயேச்சைக் குழுவின் பெயர் :
...........................................................................................................................................

...........................................................................................................................................

02. கட்சி செயலாளரின் பெயர் / சுயேச்சைக்குழுத் தலைவரின் பெயர் :
...........................................................................................................................

...........................................................................................................................................

...........................................................................................................................................

03. கட்சி செயலாளரின் / சுயேச்சைக்குழு தலைவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. உயர்ந்தபட்ச செலவு எல்லை (ரூபா) : ....................................................

05. கட்சி செயலாளரின் / சுயேச்சைக்குழுவின் இணக்கம் :

இணங்குகின்றேன் / இணங்கவில்லை.

.........................................................
கையொப்பம்

.........................................................
பதவி முத்திரை

திகதி : ........................................................

## செலவின விபரத்திரட்டு

(நாளாந்தம் செலவினங்களை பதிவு செய்தல் வேண்டும்.)

| திகதி | செலவுக்குரிய செயற்பாடுகள் | நிதிப் பெறுமதி (ரு) | கோரல் கட்டளைப் பத்திர இலக்கம் | ஒவ்வொரு செலவு விடயத்திற்காகவும் நிதி கிடைக்கப்பெற்ற விதம் (வருமானம் / கிடைக்கும் மூலம்) | |
|---|---|---|---|---|---|
| | | | | கிடைக்கும் மூலம் | அடையாள அட்டை இல. / TIN இலக்கம் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை (ரு) : ....................................................... .........

சட்டத்தின் 5 ஆம் பிரிவிற்கும் மற்றும் 6(5) உட்பிரிவிற்கும் முழுக் கவனத்தைச் செலுத்தவும்.

TIN - உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவிலக்கம்

**அனைத்து செலவினங்களையும் உறுதிப்படுத்த முடியுமான ஆவணங்களை இணைப்புக்களாக சமர்ப்பித்தல்**

(செலவு செய்ய முடியுமான பணிக்கமைய ஆவணங்களை இலக்கமிட்டு வேறுபடுத்தி இணைப்பாக சமர்ப்பித்தல் வேண்டும்.)

சட்டத்தின் 6 (5) உட்பிரிவுக்கு முழுமையாக கவனம் செலுத்தவும்.

அட்டவணை 02

## வருமானம் பற்றிய விபரத் திரட்டு

வங்கி : ....................................................................................................................................

கிளை: ..... ..............................................................................................................................

வங்கிக்கணக்கு இலக்கம் : ..................................................................................... ...................................

*(பல வங்கிக் கணக்குகள் இருப்பின் தனித்தனியாக குறிப்பிடுதல் வேண்டும்)*

| நிதி சார்ந்த / பொருள் சார்ந்த / சேவையாகக் கிடைத்தமை என்பது பற்றி | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி | நிதிப் பெறுமதி (ரூ) | கொடை வழங்கியவரின் பெயர் | தே.அ.அ.இல. / TIN இலக்கம் | இணைப்புப் பத்திர இலக்கம் |
|---|---|---|---|---|---|
| நிதிசார்ந்த | | | | | |
| பொருட்கள் | | | | | |
| சேவை | | | | | |

மொத்த வருமானம் -: ..................................................................................................................... ...............................

(அனைத்து செலவினங்களும் பொருட்கள், சேவைகள் மற்றும் நிதி அடிப்படையில் சந்தைப் பெறுமதிக்கமைய மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்

சட்டத்தின் 6(4) ஆம் பிரிவின் பிரகாரம் தகவல்களை உள்ளடக்குதல் வேண்டும்.

சட்டத்தின் 5 ஆம் பிரிவு தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

பொருட்களாகக் கிடைக்கப் பெற்றிருப்பின், மதிப்பீடு செய்யப்பட்ட விடயம் யாது? ஏற்றுக் கொள்ளக்கூடிய நபரா, நிறுவனமா என்பதைக் குறிப்பிடவும்.

TIN - உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவிலக்கம்

அட்டவணை 03 - A

### வேட்பாளரால் பூரணப்படுத்த வேண்டிய சத்திய வெளிப்படுத்துகை

(நடவடிக்கைச் செயன்முறை 1.2.1. இன் பிரகாரம் சத்திய வெளிப்படுத்துகை)

### சத்திய வெளிப்படுத்துகை

........................................................................ (முகவரி) என்னும் முகவரியில் வசிக்கும் ................................................................ (பெயர்) ஆகிய நான், பௌத்த / இந்து / உரோமன் கத்தோலிக்க / இஸ்லாமிய சமயத்தவர் என்ற வகையில் பயபக்தியுடனும், நேர்மையாகவும், உண்மையுடனும் உறுதிப்படுத்தி சத்தியம் செய்து / உறுதியுரை பகர்கின்றேன்.

1. மேற்கூறப்பட்ட சத்தியப் பிரமாணம் / உறுதியுரை பகன்று உறுதிப்படுததுபவர் நானாவேன்.
2. 2024 எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் உறுப்பினர்களை தெரிவுசெய்யும் வாக்கெடுப்பில் நான் ஒரு வேட்பாளர் ஆவேன்.
3. அவ்வாறு வேட்பாளர் ஆனமையால், 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளேன் என்பது பற்றி நான் அறிவேன்.
4. 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட அனுமதி பெற்ற நிதிக்கான செலவு எல்லையை மீறாதவாறு இம்முறை தேர்தல் செலவுகளை மேற்கொண்டேன் எனவும்,
5. தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளல் தடைசெய்யப்பட்டுள்ள நன்கொடைகள் அல்லது ஏற்றுக் கொள்ளல் இடம்பெறவில்லை எனவும்,
6. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், இந்த செலவு விபரத்திரட்டு 21 நாட்களுக்குள் கையளிக்கப்பட்டுள்ளதெனவும்,
7. கையேற்கப்பட்ட நன்கொடைகள் அல்லது உதவுதொகை மற்றும் தேர்தல் சட்டங்கள் நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செலவு வகைகள் அனைத்தினதும் தகவல்கள், வருமானம் மற்றும் செலவின விபரத்திரட்டுக்களில் மற்றும் ஏனைய ஆவணங்களில் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளதெனவும்,
8. தேர்தலுக்காக கிடைக்கப்பெற்ற உதவுதொகை, நன்கொடைகள் அனைத்தினதும் பெறுமதிகளை முறையாக மதிப்பீடு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன்.
9. இந்த சத்திய வெளிப்படுத்துகையுடன் இணைத்துச் சமர்ப்பிக்கப்படுகின்ற அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.................................

**வேட்பாளரின் கையொப்பம்**

மேற்படி சத்திய வெளிப்படுத்துகையை வாசித்து விளங்கிக்கொண்ட பின், .... ஆண்டு ... மாதம் ... ஆந் திகதி சத்தியம் செய்து /உறுதியுரை வழங்கி என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

.................................

**சத்திய ஆணையாளர்/ சமாதான நீதிவானின் கையொப்பம்**

* 50 ரூபா முத்திரையின் மீது கையொப்பமிடவும்.

அட்டவணை 03 - B

**அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி, சுயேச்சைக் குழுவினால் நிரப்பப்பட வேண்டிய சத்திய வெளிப்படுத்துகை**

**சத்திய வெளிப்படுத்துகை**

.......................................................................(முகவரி) என்னும் முகவரியில் வசிக்கும் ......................................................................................................(பெயர்) ஆகிய நான், பௌத்த / இந்து / உரோமன் கத்தோலிக்க / இஸ்லாமிய சமயத்தவர் என்ற வகையில் பயபக்தியுடனும், நேர்மையாகவும், உண்மையுடனும் சத்தியம் செய்து/ உறுதியுரை பகர்கின்றேன்.

1. மேற்கூறப்பட்ட சத்தியப் பிரமாணம் வழங்குபவர் / உறுதியுரை பகர்பவர் நானாவேன்.
2. 2024 எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் உறுப்பினர்களை தெரிவுசெய்யும் வாக்கெடுப்புக்கு வேட்பாளர்களை முன்னிறுத்தும் ................................ எனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் / சுயேச்சைக்குழுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரஜை நானாவேன்.
3. இந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி / சுயேச்சைக்குழு 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது என்பது பற்றி நான் அறிவேன்.
4. 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட அனுமதி பெற்ற நிதிக்கான செலவு எல்லையை மீறாதவாறு இம்முறை தேர்தல் செலவுகளை மேற்கொண்டேன் எனவும்,
5. தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளல் தடை செய்யப்பட்டுள்ள, நன்கொடைகளை ஏற்றல் அல்லது ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனவும்,
6. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், இந்த செலவின விபரத்திரட்டு 21 நாட்களுக்குள் கையளிக்கப்பட்டுள்ளதெனவும்,
7. கையேற்கப்பட்ட நன்கொடைகள் அல்லது உதவுதொகை மற்றும் தேர்தல் சட்டங்கள் நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செலவு வகைகள் அனைத்தினதும் தகவல்கள், வருமானம் மற்றும் செலவு விபரத்திரட்டுக்களில் மற்றும் ஏனைய ஆவணங்களில் சரியாக உள்ளடக்கப்பட்டு உள்ளதெனவும்,
8. தேர்தலுக்காக கிடைக்கப்பெற்ற நன்கொடைகள் மற்றும் பங்களிப்புகள் அனைத்தினதும் பெறுமதிகளை முறையாக மதிப்பீடு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன்.
9. இந்த சத்திய வெளிப்படுத்துகையுடன் இணைத்துச் சமர்ப்பிக்கப்படுகின்ற அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும்...இத்தால்...வெளிப்படுத்துகின்றேன்.

மேற்படி சத்திய வெளிப்படுத்துகையை வாசித்து விளங்கிக்கொண்ட பின், .... ஆண்டு ... மாதம் ... ஆந் திகதி சத்தியம் செய்து/ உறுதியுரையை வழங்கி என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது

**அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரின்/ சுயேச்சைக் குழுத் தலைவரின் கையொப்பம்**

................................

**சத்திய ஆணையாளர்/சமாதான நீதவான்**

**கையொப்பம்**

•50 ரூபா முத்திரையின் மீது கையொப்பமிடுதல் வேண்டும்.

அட்டவணை 04

**செலவின விபரத்திரட்டுக்களை பரீட்சிப்பதற்காக விண்ணப்பிக்கின்ற ஆட்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தினால் இந்த மாதிரிப் படிவத்தை வழங்குதல் வேண்டும்.**

செலவின விபரத்திரட்டுக்களை பரிசீலனை செய்வதற்காக சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளல்

01. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :...........................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

02. விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

03. முகவரி: ................................................................................................................................................

................................................................................................................................................

04. தொழில் : ...........................................................................

05. தேர்தல் பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்டம்: .................................................................

06. தொலைபேசி இலக்கம்: ..................................................................................................

மேற்கூறப்பட்ட தகவல்களை வழங்கியுள்ள எனக்கு ........................................ **(கட்சியின் பெயர் / சுயேச்சைக்குழு)** கட்சியினால் 2024 எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் உறுப்பினர்களை தெரிவுசெய்யும் வாக்கெடுப்பில் போட்டியிடுகின்ற ....................................... ............................ ...............**(வேட்பாளரின் பெயர்)** என்பவரால் வழங்கப்பட்டுள்ள செலவின விபரத்திரட்டை பரீட்சிப்பதற்காக அனுமதி வழங்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

இந்த ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது அவ்வாவணங்களில் மாற்றஞ் செய்தல், சேதப்படுத்துதல் மற்றும் அவ்விடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லல் போன்ற செயல்கள் பொதுச் சொத்துக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதையும், அத்துடன் ஆவணங்களைப் பரிசீலித்தல் தேர்தல் ஆணைக்குழு அலுவலர்களின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் நான் நன்கறிவேன்

திகதி: ....................................

.......................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

**(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)**

.............................................................. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் / சுயேச்சைக் குழுவின் .............................................................. வேட்பாளரின் .......................... ................................ செலவின விபரத்திரட்டுக்களை பரிசீலிப்பதற்காக ........................ ஆந் திகதி மு.ப./பி.ப. ................. தொடக்கம் ................. மணி வரை கால அவகாசம் வழங்கப்படுமென்பதை அறியத்தருகின்றேன்.

திகதி: ....................................

............................................... ......................

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் /
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சார்பாக.

***பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும். பொருத்தமற்ற இடைவெளிகளில் சிறு கோடிடவும்.**

அட்டவணை 05

**செலவின விபரத்திரட்டுக்களை பரீட்சிப்பதற்காக விண்ணப்பிக்கின்ற ஆட்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தினால் இந்த மாதிரிப் படிவத்தை வழங்குதல் வேண்டும்.**

**செலவின விபரத்திரட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளல்**

01. விண்ணப்பதாரரின் முழுப் பெயர்: ..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

02. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

03. முகவரி : ..........................................................................................................
..........................................................................................................

04. தொலைபேசி இலக்கம் : ..........................................................................

மேற்படி தகவல்களை வழங்கியுள்ள எனக்கு ...................................................................... அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின்/ சுயேச்சைக் குழுவின் செலவின விபரத்திரட்டின் உறுதிப்படுத்திய பிரதியினை வழங்குமாறும் அதற்கான தொகை............................................ இலக்கத்தினைக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் செலுத்தப்பட்டுள்ளதென்பதனையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

திகதி: ................. ............ ....

.......... .......... .................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

**(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)**

........................................ ................................................ **அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் / சுயேச்சைக் குழுவின் ..............................................** வேட்பாளரின் **2024** சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ........................................................................... வேட்பாளரின் செலவின விபரத்திரட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை வழங்குவதற்கு அனுமதியளிக்கின்றேன்.

திகதி : ...................................

.................... ...............................................

தேர்தல் ஆணையாளர் நாயகம்/
தேர்தல் ஆணையாளர் நாயகம் சார்பாக

***பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும். பொருத்தமற்ற இடைவெளிகளில் சிறு கோடிடவும்.**

அட்டவணை 06

**செலவின விபரத்திரட்டுக்களை பரீட்சிப்பதற்காக விண்ணப்பிக்கின்ற ஆட்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தினால் இந்த மாதிரிப் படிவத்தை வழங்குதல் வேண்டும்.**

**2023 இல 03 தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் முறைப்பாடுகளை சமர்ப்பித்தல்**

01. முறைப்பாட்டாளரின் முழுப் பெயர் : ..........................................................................................................................
..........................................................................................................................

02. முகவரி : ..........................................................................................................................
..........................................................................................................................

03. தொலைபேசி இலக்கம் : ..........................................................................................

04. அடையாள அட்டை இலக்கம் : .......................................................................................... ..

முறைப்பாடு

..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

மேலுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ..................................

......................................................................

முறைப்பாட்டாளரின் கையொப்பம்

முறைப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் .................. இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

***ஏற்புடையதாகாத சொற்களை வெட்டி விடவும்.**

---

**(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)**

2023 இல 03 தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் திரு/திருமதி..........................................................................................................................அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு.................................................................. இல் ........................................................ ஆல் மு.ப/ பி.ப..............................மணிக்கு கையேற்கப்பட்டதென்பதை அறியத்தருகின்றேன்.

......................................................................

தேர்தல் ஆணையாளர் நாயகம்/
தேர்தல் ஆணையாளர் நாயகம் சார்பாக

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

அட்டவணை **07**

## செலவின விபரத்திரட்டுக்கள் கிடைத்தல் பற்றிய நாளாந்த அறிக்கை

திகதி : ....................................

நேரம் : மு.ப. .................. தொடக்கம் பி.ப .............................. வரை

| பதிவு இலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பெயர்/ சுயேச்சைக் குழுவின் இலக்கம் | விபரத் திரட்டினை வழங்கியவரின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் | தொலைபேசி இலக்கம் | கிடைத்த நேரம் | வேறு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

கிடைக்கப்பெற்ற அனைத்து செலவின விபரத் திரட்டுக்களின் மொத்தம் : ...................................

விபரத்திரட்டுக்களை அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் : ...............................................................

விபரத்திரட்டுக்களை அத்தாட்சிப்படுத்துபவரின் பதவி : ...................................... .....................

கையொப்பம் : ................... ...............

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

அட்டவணை 08

பொறுப்பதிகாரி,
பொலிஸ் நிலையம்,
..............................................

**செலவின விபரத்திரட்டுக்களின் மூலப் பிரதிகளை பொலிசுக்கு ஒப்படைத்தல்**

2024 எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் உறுப்பினர்களை தெரிவுசெய்யும் வாக்கெடுப்பில் போட்டியிடும் ..................................................................................................................... வேட்பாளர் / அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி / சுயேச்சைக் குழுவினால் தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தும சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட செலவின விபரத்திரட்டுக்களின் மூலப் பிரதியை ................................... முறைப்பாட்டின் மேல் நடவடிக்கைக்காக........ ..............................பொலிஸ் நிலையத்தின் ............................................................... உத்தியோகத்தரிடம் ....................................................... ஆம் திகதி மு.ப/ பி.ப .................. மணிக்கு ............................... நிலையததில் ஒப்படைக்கப்பட்டது.

.............................................................
ஒப்படைத்தவரின் கையொப்பம

பெயர் : ........... .......... . .................................................................

பதவி : ....................... ....... ...............................................

பதவி முத்திரை

அடையாள அட்டை இலக்கம் : .................................................................

......................................................................................................................................................................................................

மேற்படி கூற்றை உண்மையென ஏற்றுக்கொள்கின்றோம்.

அதற்கமைய ...................................................................................................... ......................... அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி / சுயேச்சைக் குழு வேட்பாளரினால் தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் ................................................. தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விபரத்திரட்டு ..................... ஆம் திகதி மு.ப/பி.ப .......... ................ மணிக்கு ............................ இடத்தில் கையேற்கப்பட்டது.

***ஏற்புடையதாகாத சொற்களை வெட்டி விடவும்.**

................... ...............................................................
கையேற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்

பெயர் : ............ ........... ...................................................................

பதவிப் பெயர் : .................. ............................................................

பதவி : ..................................................................................

உத்தியோகபூர்வ முத்திரை

அடையாள அட்டை இலக்கம் : .....................................................................

உத்தியோகபூர்வ அடையாள அட்டை இலக்கம் : .......................................................

**இணைப்பு - 01**

## 6 (5) பிரிவிற்கமைய விளக்களிக்கப்பட்ட செலவினங்கள்

வருமான விபரத்திரட்டில் வாகனம் தொடர்பில் கோரப்பட்ட தகவல்களை வழங்க வேண்டுமெனினும் அதனை வருமான, செலவின விபரத்திரட்டில் உள்ளடக்க வேண்டிய அவசியமில்லை.

**(I)** வேட்பாளரின் போககுவருத்து நடவடிக்கைகள்

1. வேட்பாளரின் போக்குவருத்து நடவடிக்கைகளுக்காக அனுமதிபெற்ற வாகன இலக்கம்: ............................

2. வாகனத்தின் வகை: துவிச்சக்கரவண்டி/கார்/வேன்/ஜீப்/பஸ்/லொரி/படகு/ஹெலிகப்டர்

   **(அவசியமற்ற சொற்களை வெட்டிவிடவும்.)**

3. அனுமதி பெற்ற மேலதிக வாகனத்தின் இலக்கம் * : ......................................................................

4. நிரந்தர சாரதியின் பெயர் : ........................................................................................................

   ........................................................................................................................................

5. நிரந்தர சாரதியின் தேசிய அடையாள அட்டை இலக்கம் : ............................ ................................

6. சாரதிக்கு வேதனம் வழங்கப்படுகின்றது. ஆம் : ☐ இல்லை : ☐

7. நிரந்தர வாகனம் வாகனத்தின் உரிமம் : வேட்பாளருக்குரியது/வேண்டப்பட்ட வாகனம்/வாடகைக்கு பெறப்பட்ட வாகனம்

   **(அவசியமற்ற சொற்களை வெட்டிவிடவும்.)**

8. நிரந்தர வாகனம் வேண்டப்பட்டது/வாடகைக்குப் பெறப்பட்டது எனின் :

   I. பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின்/ நிறுவனத்தின் பெயர்: .................................................

   .................... ..........................................................................................................

   ................................................................................................................................

   II. முகவரி : .............................................................................................................

   ................................................................................................................................

   III. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ....................................................................

*பிரச்சார நடவடிக்கைகளுக்காக ஒரு வாகனத்தினை மாத்திரமே பயன்படுத்த முடியும். மேலதிக வாகனம், அனுமதி பெறப்பட்ட முதலாவது வாகனம் பழுதடைந்தால்/ செலுத்த முடியாது விட்டால் மாத்திரம் பயன்படுத்த முடியும்.

**(II)** வேட்பாளரின் பிரசார நடவடிக்கைகளுக்காக நிறுவப்பட்ட அலுவலகத்திற்கு பெற்றுக்கொண்ட காகிதாதிகள்:

| திகதி | பெற்றுக்கொண்ட காகிதாதிகள் | கொள்வனவா அல்லது நன்கொடையா என்பது பற்றி | கொள்வனவு செய்திருப்பின் தொகை | பற்றுச்சீட்டு இலக்கம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**(III)** வேட்பாளர் பயன்படுத்தும்,

- தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :
  - I. . ....................................................
  - II. . ....................................................
- மாதாந்தப் பட்டியல் (ரூபா) : ....................................................

**(IV)** வேறு முறையிலான தொடர்பாடல் செலவினங்கள்

- தொடர்பாடல் ஊடகம்: .. .........................................................
- மாதாந்தப் பட்டியல் (ரூபா) : ..........................................................